**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284 /2017**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18–ம் நாள் செவ்வாய்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.11.2025 | | |
| பெயர்: | நடராஜன் (DW– 3 Cross ) | தகப்பனார் பெயர்: | பக்கிரிசாமி |
| கிராமம்: | நாங்கூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 56/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 18.11.2025</u>**
**(ஆரம்பித்த நேரம்– 12.07 )**

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. யார் யார் மீது வழக்கிட்டுள்ளார் என்றால் கண்னன் என்பவர் பாலமுரளி மீது வழக்கிட்டுள்ளார். பிரதிவாதி பாலமுரளியை எனக்கு சுமார் 30 வருடங்களாக தெரியும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2005 முதல் தாவா சொத்தை கோவிந்தராஜ் குத்தகை சாகுபடி செய்துவந்தார் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். கோவிந்தராஜ் சாகுபடி அனுபவத்தை கடந்த 2005 –ம் வருடம் வாங்கினார் என்று என் முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

2. சாகுபடி உரிமை மாற்று பத்திரத்தில் நான் தரப்பினரா என்றால் இல்லை. அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. 2005–ம் வருட சாகுபடி உரிமை மாற்று பத்திரத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேன். அந்த பத்திரம் என்பது 100 ரூபாய் பத்திரம் ஆகும். நான் மேற்படி ஆவணத்தை எந்த தேதியில் எந்த மாதத்தில் நேரில் பார்த்தேன் என்றால் 2005–ம் வருடம் பார்த்தேன். தேதி மாதம் ஞாபகமில்லை. அந்த ஆவணம் 3 பக்கங்களை கொண்டது.

3. அந்த ஆவணம் கண்ணனுக்கும், கோவிந்தராஜிக்கும் ஏற்பட்டது. எனது முதல் விசாரணையில் கண்ணனுக்கும், கோவிந்தராஜிக்கும் பத்திரம் ஏற்பட்ட விவரத்தை நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் பத்திரத்தை நேரடியாக பார்க்காமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல பத்திரமே ஏற்பவில்லை என்றாலும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அதில் பாலமுரளியே தாக்கல் செய்திருப்பார் என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணையில் தாவா 1–வது அயிட்ட சொத்து கோவிந்தராஜ் வசத்தில் இருந்ததாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். கோவிந்தராஜ் வசத்திலிருந்து அவர் இறந்தபிறகு தற்போது பாலமுரளி வசம் உள்ளது,

4. தாவா சொத்து என்பது நஞ்சை ஆகும். தாவா சொத்தில் பாலமுரளி எந்த ரக நெல்லை சாகுபடி செய்து வந்தார் என்று எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் ADT 46 ரக நெல் சாகுபடி செய்துள்ளார். தாவா சொத்தில் ADT 46 ரக நெல் சாகுபடியை பிரதிவாதி செய்யவில்லை என்றாலும், அப்படி செய்திருந்தால் அதை என் முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவா 1–வது அயிட்ட சொத்தை பொறுத்த நான்கெல்லையை பற்றி எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

5. தாவா 1– வது அயிட்ட சொத்து பாலமுரளி வசம் இல்லாததால்தான் நான் நான்கெல்லை பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் பாலமுரளி தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு கோயிலுக்கு பகுதி செலுத்தியதாக கூறவில்லை என்றால் சரிதான். ஆனால் பாலமுரளிதான் பகுதி செலுத்தியுள்ளார். பாலமுரளி தாவா 1–வது அயிட்ட சொத்திற்கு பகுதி செலுத்தியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை ஆனால் வழக்கிற்காக அவர் பகுதி செலுத்தியுள்ளார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. பாலமுரளி பெட்ரோல் பங்க் வைத்துள்ளார். அவர் அந்த பகுதியில் செல்வாக்கான நபரா என்றால் நடுத்தர வகுப்பை சேர்ந்தவர். தாவா சொத்தின் நான்கெல்லை பற்றி எனது முதல் விசாரணையில் கூறாமல் அனுபவத்தை பற்றி என்னால் சாட்சியம் அளிக்க இயலாது என்றால் சரியல்ல. பாலமுரளி என்னுடைய நீண்ட நாள் நண்பர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . தாவா சொத்து வாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.29)**